


# இயேசு மரித்தார்!

Scanned by CamScanner

# இயேசு மரித்தார்!

எல்லாருக்காகவும்
உம்முடைய உயிரைக் கொடுத்து,
சிலுவையில் மரித்த எங்கள்
ஆண்டவராகிய இயேசுவே!
உம்மைத் துதிக்கிறோம்.

எங்கள் பாவங்களுக்காக நீர்
அடைந்த பாடுகளை நினைத்து,

உம்முடைய
அன்பை
தியானிக்கிறோம்.



எங்கள் பாவங்களை
மன்னியும்.

உம்முடைய தழும்புகளால்
நாங்கள் குணமாவோம்.
ஆமென்!


Scanned by CamScanner

# இயேசு மரித்தார்! ஆனால் உயிர்த்தெழுந்தார்!!

மரணம் அதிர்ச்சிக்குரிய, துயரமிக்க ஒரு முக்கிய நிகழ்ச்சியாகும். மரணத்தை தவிர்க்கவே முடியாது. மரணத்திற்கு யாரும் தப்ப முடியாது. ஒரே தரம் மரிப்பதும் பின்பு நியாயத்தீர்ப்படைவதும் மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது *(எபிரெயர் 9:27)* என்று பைபிள் போதிக்கிறது. இவ்வுலகில் எல்லோரும் ஒரு நாள் மரிக்கிறார்கள் என்றாலும் ஒரு சிலருடைய மரணம் சரித்திரத்தையே மாற்றியமைக்கின்ற மாபெரும் முக்கிய நிகழ்ச்சியாக அமைந்திருக்கின்றது. மாபெரும் தலைவர்களின் அகால மரணம், தியாகச் செம்மல்களின் திடீர் மரணம் சரித்திரத்தில் மறக்க முடியாத நிகழ்ச்சிகளாக அமைந்திருக்கின்றன.

Scanned by CamScanner

2000 ஆண்டுகளுக்கு முன் இவ்வுலகில் மனித அவதாரமாகப் பிறந்த இயேசு கிறிஸ்துவின் மரணம் மிக மிக முக்கியமான நிகழ்ச்சியாகும். ஒவ்வொரு ஆண்டும் **'பெரிய வெள்ளிக்கிழமை'** (Good - Friday) என்று போற்றப்படும் நாளில் உலகமெங்கிலும் இயேசு கிறிஸ்துவின் மரணத்தை நினைவு கூறுகிறார்கள்.



Scanned by CamScanner

## இயேசு மரித்தார்!
## சரித்திர நிகழ்ச்சி

இயேசு கிறிஸ்துவின் மரணம் கிறிஸ்தவர்களுக்கு மட்டுமல்ல, இவ்வுலகில் வாழும் ஒவ்வொருவருக்குமே மிகவும் அவசியமான ஒரு நிகழ்ச்சியாகும். இயேசுவின் மரணம் எனக்கு எப்படி அவசியம் என்று நீங்கள் ஒருவேளை யோசிக்கலாம். இயேசு கிறிஸ்து இவ்வுலகில் வந்து பிறந்ததின் மிக முக்கிய நோக்கமே மரிப்பதற்காகத்தான். இயேசு கிறிஸ்துவை அவருடைய சொந்த மக்களான யூதர்களே மிகவும் எதிர்த்தனர்; அவரைப் புரிந்துகொள்ளவில்லை; புறக்கணித்தனர்; அவரை சிலுவையில் அறையும்படி ஆட்சியாளரை கட்டாயப் படுத்தினர்; அவதூறு பேசி அவரை நிந்தித்தனர்.

Scanned by CamScanner

இயேசு சிலுவை மரத்தில் அறையப்பட்டு, கோரமாகத் தொங்கி, இரத்தத்தைச் சிந்தி தன்னுடைய உயிரைக் கொடுத்தார். இச்சரித்திர நிகழ்ச்சியில் ஒரு மாபெரும் ஆன்மீக உண்மையுள்ளது. இயேசு கிறிஸ்து மனிதனுடைய பாவத்தைப் போக்கும் நிவாரணமாக பலியானார்.

இயேசு கிறிஸ்துவின் மரணத்தோடு அவர் சரித்திரம் முடிந்துவிடவில்லை. மூன்றாம் நாள் அவர் மரணத்தையும் பாதாளத்தையும் வென்றவராக உயிர்த்தெழுந்தார்! இன்றும் உயிரோடு இருக்கிறார்!



Scanned by CamScanner

# ஆன்மீக உண்மை!
# இயேசு ஏன் மரித்தார்?

இவ்வுலகில் பிறந்த ஒவ்வொருவரும் பாவத் தன்மையுடன் பிறந்து, பாவம் செய்கிறவர்களாக வாழ்கிறார்கள்.

☛ பாவத்தின் சம்பளம் மரணம்.

அதாவது பாவத்திற்கு கிடைக்கும் கூலி மரணமாகும்.

☛ பாவம் செய்கிற ஆத்துமாவே சாகும்.

மனித வர்க்கமே இப்படிப்பட்ட சாபத்திற்குள்ளாகியிருக்கிறது. இது இறைவனுடைய நியாயமான நீதி தீர்ப்பாகும்.

☛ இரத்தஞ் சிந்துதலில்லாமல் பாவ மன்னிப்பு உண்டாகாது.

மனிதனின் பாவத்திற்கு மிருகம், பறவைகளின் இரத்தம் ஈடுசெய்ய முடியாது.

Scanned by CamScanner

பரிசுத்தமான இரத்தம் சிந்தப்பட வேண்டிய அவசியமிருந்தது. எனவே இயேசு பாவத்திற்கான பிராயச்சித்த பலியாக இரத்தம் சிந்தி மரிப்பதற்கு இவ்வுலகத்திற்கு வந்தார். நம்முடைய பாவங்களுக்காக நாம் மரிக்க வேண்டிய இடத்தில் நமக்குப் பதிலாக சிலுவையில் மரித்தார். அவருடைய மரணத்தால் பாவத்திற்குரிய தீர்ப்பாகிய நரக ஆக்கினையிலிருந்து நாம் விடுதலை பெறுகிறோம்.

☞ நம்மிடத்தில் அன்புகூர்ந்து, தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவினார்.



ரோமர் 6 : 23 ; எசேக்கியேல் 18 : 20 ;
எபிரெயர் 9 : 22 ; வெளி 1 : 6

Scanned by CamScanner

# இயேசு மரித்தார்!
# வேத வசனங்கள்

நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார். ரோமர் 5 : 8

இயேசு மரித்தது, பாவத்திற்கென்று ஒரேதரம் மரித்தார். ரோமர் 6 : 10

கிறிஸ்துவே மரித்தவர்; அவரே எழுந்துமிருக்கிறவர். ரோமர் 8 : 34


கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, வேத வாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார்.
I கொரிந்தியர் 15 : 3,4

இயேசு எல்லாருக்காகவும் மரித்தார்.
II கொரிந்தியர் 5 : 15

Scanned by CamScanner

தம்முடனேகூட நாம் ஏகமாய்ப் பிழைத்திருக்கும்படி அவர் நமக்காக மரித்தாரே. I தெசலோனிக்கேயர் 5:10

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து எனக்காக,என்னுடைய பாவங்களுக்காக, எனக்குப் பதிலாக மரித்தார் என மனப்பூர்வமாக நம்பி உங்கள் உள்ளத்தில் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளுங்கள். **இயேசு கிறிஸ்து உங்களுக்காக என்ன செய்தார்** என்ற புத்தகத்தை நீங்கள் படிக்க விரும்பினால் எங்களுக்கு எழுதுங்கள்.




Scanned by CamScanner

# இயேசு உயிர்த்தெழுந்தார்!


உயிர்த்தெழுதல்! இது ஒரு ஆச்சரிய மான உண்மையாகும். அற்புதமான அனுபவ மாகும்! மரித்து ஒருசில நிமிடங்களுக்குப் பின்னர் அல்லது ஒன்றிரண்டு மணி நேரத்திற்குப் பின்னர் மீண்டும் உயிர்பெற்ற சிறப்புச் செய்திகளை செய்தித்தாள்களில் நாம் படித்திருப்போம். ஆனால் உயிர்த் தெழுதல் என்பது முற்றிலும் வித்தியாச மான ஒன்றாகும்.

இயேசு கிறிஸ்து ஈடு இணையற்றவர்! ஒப்பற்றவர்! அவர் பிறப்பிலும், வளர்ப்பிலும் அற்புதங்களைச் செய்ததிலும், உபதேசங்களைப் போதித்ததிலும் ஈடு இணையற்றவராக இருந்தார். அவருடைய மரணம் ஒப்பிடப்பட முடியாதது. அவர் உயிர்த்தெழுதலிலும் நிகரற்றவர்!

Scanned by CamScanner

2000 ஆண்டுகளுக்கு முன் இவ்வுலக மக்களின் ஆன்மீக மீட்புக்காக சிலுவை மரத்தில் தன் ஜீவனைக் கொடுத்தார். அவரை சிலுவையின் மரண தண்டனைக்கு உள்ளாக்கினவர்கள், சிலுவையில் அறைந்து கொன்றவர்கள் அவருடைய மரணத்தோடு அவர் வாழ்வு முடிந்தது என்று எண்ணினார்கள்.

உயிர்த்தெழுந்தாரே! அல்லேலூயா
ஜெயித்தெழுந்தாரே!
உயிருடன் எழுந்த மீட்பர் இயேசென்
சொந்தமானாரே!



கல்லறை திறந்திடவே
கடும் சேவகர் பயந்திடவே
வல்லவர் இயேசு
உயிர்த்தெழுந்தாரே
வல்ல பிதாவின் செயலிதுவே

Scanned by CamScanner

# இயேசு உயிர்த்தெழுந்தார்!

இயேசு கிறிஸ்துவின் சரீரம் குகை போன்ற ஒரு கல்லறையில் வைக்கப்பட்டது. அக்கல்லறையின் வாசலில் ஒரு பெரிய கல் வைக்கப்பட்டது. முத்திரை செய்யப்பட்டது. போர்ச் சேவகர்கள் காவல் காத்தனர். (மத்தேயு 27 : 66) ஆனால் இயேசு கிறிஸ்து தாம் முன் சொல்லியிருந்தபடியே மூன்றாம் நாள் உயிருடன் எழும்பினார். இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை நினைவு கூரும் நன்னாள் தான் '**ஈஸ்டர்**' பண்டிகை. இயேசு கிறிஸ்து, கிறிஸ்தவர்களுக்கு மட்டும் உரியவர் அல்ல. எல்லோரையுமே இயேசு கிறிஸ்து நேசிக்கிறார்!

இயேசு கிறிஸ்து தேவகுமாரன் ஆகையால் மரணத்தின் மேலும் பாதாளத்தின் மேலும் வெற்றிகொண்டவராய் உயிர்த்தெழுந்தார்.

Scanned by CamScanner

‘நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்’.
‘என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்,
என்னை விசுவாசிக்கிறவனுக்கு நித்திய ஜீவனுண்டு!’ (யோவான் 11:25; 6:47)
என்று அவர் கூறினார்.



ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை நீங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டால் உங்களுக்கு நித்திய ஜீவனுண்டு. அவரை விசுவாசிக்கிறவர்களுக்கு மரணத்திற்குப் பின் மோட்ச பாக்கியம் உண்டு.

Scanned by CamScanner

# இயேசு உயிர்த்தெழுந்தார்!

## உயிர்த்தெழுந்த வரலாறு:

| சுவிசேஷம் | அதிகாரம் | புதிய ஏற்பாட்டில் பக்கம் |
|---|---|---|
| மத்தேயு | 28 | 46 |
| மாற்கு | 16 | 75 |
| லூக்கா | 24 | 122,123 |
| யோவான் | 20,21 | 158,159 |

**போதனை:**

| | | |
|---|---|---|
| I கொரிந்தியர் | 15 | 241-243 |

இயேசுவின் உயிர்த்தெழுதலில் தேவனுடைய அசாதாரணமான, ஆச்சரியமான தெய்வீக வல்லமை வெளிப்பட்டது.



இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலினால் அவரை விசுவாசிப்பவர்களுக்கு மரணத்திற்குப் பின் உயிர்த்தெழுதலின் பாக்கியம் மட்டும் அல்ல, இவ்வுலக வாழ்க்கையிலும், பாவசோதனைகளில் விழுந்து விடாமல் பரிசுத்தத்திற்குரிய வெற்றியுடன் வாழ பலமும், வல்லமையும் கிடைக்கிறது. உயிர்த்தெழுதலின் வல்லமையினால் பாவத்தின் மீது நமக்கு வெற்றி கிடைக்கிறது.

*உயிரோடு எழுந்தவரே!*
*உம்மை ஆராதனை செய்கிறோம்*
*ஜீவனின் அதிபதியே!*
*உம்மை ஆராதனை செய்கிறோம்*
*மரணத்தை ஜெயித்தவரே!*
*உம்மை ஆராதனை செய்கிறோம்*
*பாதாளம் வென்றவரே!*
*உம்மை ஆராதனை செய்கிறோம்*

Scanned by CamScanner

## இயேசு உயிர்த்தெழுந்தார்!

மிக விரைவில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இவ்வுலகிற்கு வர இருக்கிறார். அவர் வரும்போது அவரை ஏற்றுக்கொண்டு மரித்தவர்கள் உயிர்த்தெழுவார்கள்; எடுத்துக்கொள்ளப்படுவார்கள். அவரை ஏற்றுக்கொண்டு உயிரோடிருக்கிறவர்கள் அப்படியே எடுத்துக்கொள்ளப்படுவார்கள். இப்படி எடுத்துக்கொள்ளப்படுபவர்கள் உயிர்த்தெழுதலின் சரீரத்தைப் பெறுவார்கள். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்களுக்கு உயிர்த்தெழுதலின் நம்பிக்கையுண்டு.

இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்தார். அவர் இன்றும் உயிரோடிருக்கிறார். உங்களுக்கு உயிர்த்தெழுதலின் நம்பிக்கை இருக்கிறதா? இயேசு கிறிஸ்துவை உங்கள் உள்ளத்தில் ஏற்றுக்கொள்ள ஆயத்தமாக இருக்கிறீர்களா?

Scanned by CamScanner

## உங்கள் கவனத்திற்கு!

1. இயேசு கிறிஸ்து

2. மனந்திரும்புங்கள்

3. இயேசுவை நோக்கி 4. பாவம்

5. இயேசுகிறிஸ்து உங்களுக்காக என்ன செய்தார்?

6. அனுதின ஜெபங்கள் - 7

7. இயேசு தங்கும் வீட்டில்

போன்ற இயேசு கிறிஸ்துவைப் பற்றி நீங்கள் அதிகமாக அறிந்துகொள்ள உதவும் வெவ்வேறு வகையான இலக்கியங்கள், DVD, ACD எங்களிடத்தில் உண்டு. நீங்கள் எங்களோடு தொடர்பு கொள்ளுங்கள்.

**தொடர்பு கொள்ள:**

✆ 94864 58275

© Follow-up Ministries Trust, Oddanchatram - 624 619

Scanned by CamScanner


# இயேசு உயிர்த்தெழுந்தார்!

மரணத்தை வென்று உயிரோடு
எழுந்த ஆண்டவராகிய இயேசுவே!
உம்மைத் துதிக்கிறோம்.


உம்முடைய உயிர்த்தெழுதலின்
வல்லமையை எங்கள் உள்ளத்தில்
அருளிச் செய்யும்.

பரிசுத்தமாக வாழ அனுதினமும்
கிருபைத் தாரும்.

எங்களுக்குக் கொடுத்திருக்கும்
உயிர்த்தெழுதலின்
நம்பிக்கையோடு உம்முடைய
வருகைக்காக காத்திருக்கிறோம்.
ஆமென்!



Scanned by CamScanner



# இயேசு
# உயிர்த்தெழுந்தார்!

Scanned by CamScanner